


# பாடும்
# சின்னப்
# பறவைகளே...

## ஆரிசன்

ஆசா பதிப்பகம்

**பாடும் சின்னப் பறவைகளே...**
ஆரிசன்©

*முதல் பதிப்பு: டிசம்பர் 2006*
*இரண்டாம் பதிப்பு: டிசம்பர் 2025*

*வெளியீடு:*
*ஆசா பதிப்பகம்.*
*1126/2 எம்.ஜி.ஆர். நகர்,*
*கீழ்க்கொடுங்காலூர்,*
*வந்தவாசி வட்டம்-604403*
*திருவண்ணாமலை மாவட்டம்.*
*செல் :7338988418, 9442311118*

*புத்தக வடிவமைப்பு: ஜீ. முருகன்*

*ISBN: 978-93-5679-418-4*

*பக்கங்கள்: 62*
*விலை: ரூ.80*

# பதிப்புரை

*குழந்தைகளின் உலகம் கனவுகளாலானது.*
*கனவுகள் வண்ணங்களாலானவை.*
*வண்ணங்கள் சிறகடித்துப் பறப்பதைப் பார்த்துக்*
*குதூகலிக்க...*
*ஒன்று குழந்தையாக இருக்க வேண்டும்.*
*இல்லையேல் குழந்தை மனமாவது இருக்க வேண்டும்.*

*தமிழில் குழந்தைகளைப் பற்றி*
*எழுதியவைகளில் பாதிகூடக்*
*குழந்தைகளுக்கானவைகளாய் இல்லை.*

*வருங்காலத் தலைமுறையின் வாசிப்புக்கு*
*எழுத வேண்டியவை நிறையவே இருக்கின்றன.*

*பாடப்புத்தகங்களைத் தாண்டியும்*
*புத்தகங்கள் வாசிக்கும் பழக்கங்களைக்*
*குழந்தைகளிடம் கொண்டு சேர்க்க வேண்டியது*
*அவசியமாகும்.*

*கவிஞர் ஆரிசன் எழுதியுள்ள*
*குழந்தைகளுக்கான பாட்டும், கவிதைகளும்*
*'பாடும் சின்னப் பறவைகளே...' என*
*நூலாக வந்துள்ளது.*

*வாசிப்பவர் மனக்கிளைகளில்*
*கீதம் இசைப்பது இனி தொடரட்டும்.*

**மு.முருகேஷ்**

# வாழ்த்துரை

*கவிஞர் ஆரிசன் செய்துள்ள முயற்சி பாராட்டிற்குரியது.*

**"பாட்டுத் திறத்தாலே - இவ்**
**வையத்தைப் பாலித்திட வேண்டும்"**

*என்ற பாரதியின் கவிதா மண்டலத்தில்; பாவேந்தர் பாரதிதாசன் பரம்பரையில், மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் அடியொற்றி வரும் கவிஞர்களில் ஆரிசனும் ஒருவர்,*

**"ஓடி விளையாடு பாப்பா - நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா"**

*என்றார் பாரதி. அவர் மறைந்து விட்டாலும் இப்பாட்டு ஓடி விளையாடிக் கொண்டே இருக்கிறது. ஓட முடியாத முதுமைப் பருவம் அடைந்துவிட்டவர்கள் கூட இதன் முதல் வரியைச் சொன்னவுடன் அடுத்த வரிகளைக் கட கடவெனக் கூறுவதைக் கேட்க முடியும்.*

*பாவேந்தரும் தாலாட்டில் இருந்து பல பாடல்களைத் தந்துள்ளார்.*

**"மலைவாழை அல்லவோ கல்வி**
**கல்வி கற்றிடக் கற்றிடப்**
**புரியும் புதல்வி"**

*என்ற பாடல் திரைப்படத்தில் நடிப்புக்கு இலக்கணம் வகுத்த நடிகை திருமதி. பானுமதி இராமகிருஷ்ணா அவர்கள் மூலம் பாடப் பட்டது இன்னும் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.*

**"சின்னப்பயலே சின்னப்பயலே**
**சேதி கேளடா"**

*–என்று ஏராளமான சேதிகளைக் கூறியவர் பட்டுக் கோட்டையார். தமிழ் இலக்கிய உலகில் முப்பெரும் கவிஞர்கள் எனப்*

*போற்றப்படும் இவர்கள் பற்றிச்சான்றுக்காகச் சிலவற்றை மட்டும் கூறினேன். விரித்துரைத்தால் பெருகிக்கொண்டே செல்லும்.*

*சிறுவர்களுக்கு எழுதுவது சிரமமானது. அதே சமயம் பயனுள்ளது.*

**"இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து**
**பசுமரத்தாணி போல் பதிய வேண்டும**
**ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?"**

*-என்றெல்லாம் அறிந்திருக்கிறோம். ஆகவே இளமையில் உள்ளோர் கற்பதும் அவர்களுக்குக் கற்பிப்பதும் பயன் தரும். தமிழில் இதற்கான இலக்கியத்துறை போதிய வளர்ச்சி பெறவில்லை. இன்றைய தொலைக்காட்சிச் சூழலில் படிக்கிற மாந்தரை விட பார்க்கிற மாந்தர் பெருகி விட்டனர்.*

*இத்தகு சூழலில் வாசிப்பு இயக்கம் நடத்தப்படும் அவசியத்தையும் அறிகிறோம். பருவம் கடந்தவர்களுடன் படியுங்கள், படியுங்கள் என்று மன்றாடும் அதேசமயம் கற்கும் ஆர்வமுள்ள சிறுவர்களுக்கும் கதையாக, பாடலாக, கவிதையாக படைப்புக்களைத் தருவது அவர்களை வாசிக்கத் தூண்டுவதுடன் காலத்திற்கேற்ப யோசிக்கவும் தூண்டும்.*

*கவிஞர் ஆரிசன் வழங்கியுள்ள 'பாடும் சின்னப் பறவைகளே' என்ற படைப்பு சின்னப் பறவைகளைச் சிறகடித்துப் பறக்கச் செய்யும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது. சிறுவர் தங்கமலர், வண்ணக்கதிர் போன்ற இதழ்கள் இவற்றை வெளியிட்டு உதவியுள்ளன. அவர்களுக்கு மனமார்ந்த நன்றி. இதனை வெளியிடும் கவின் நூல் பயணத்தார் குழந்தை இலக்கியத்தின் நற்பயணத்துக்கு வழிவகுத்துள்ளனர்.*

*பாரதியின் குயில் தோப்பில் கூவும் இந்தக் குயிலின் ஓசையை நீங்களே நேரடியாகக் கேளுங்கள். இடையில் நான் விளக்குவது இடையூறாகக் கூட இருக்கும்.*

*வாழ்க ஆரிசன்! வெல்க அவரது முயற்சி!*

*அன்புடன்*

***என்.நன்மாறன், Ex.எம்.எல்.ஏ.,***
*முன்னாள் மாநில துணைத்தலைவர்,*
*தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், மதுரை.*

# முன்னுரை

*கண்களுக்கும் கருத்துக்கும் இனிமையாய்...*

*இயற்கையழகில் ஈடுபாடும், நாட்டுப்பற்றும், மொழிப் பற்றும், குழந்தைகளுக்கு இளம் வயதிலிருந்தே அமைய வேண்டும் என்பதற்காக கவிஞர் 'ஆரிசன்'அவர்கள் எழுதியுள்ள "பாடும் சின்னப் பறவைகளே" -கவிதைத் தொகுப்பு சுவையானதும் பயன் மிக்கதும் ஆகும். ஆசிரியரின் கவிதைகளில் மா மழை - ஆழ்கடல்- உயர்மலை சூரியன்- சந்திரன்-மேகம்- நதியுடன் புல்வெளியென இயற்கைச் சூழல் மிகுந்திருக்கிறது.*

*மயில்-குயில்-காக்கை, கிளி, சிட்டுக்குருவியுடன்- பட்டாம் பூச்சியும் பறந்து திரிகிறது. சிங்கம்-புலி, சிறுத்தை - நரி, முதலை- பசு- ஆமை- பூனை - முதலிய விலங்குகளும் ஆங்காங்கே அதனதன் இயல்புகளைக்கூறி சிறுவர்களுக்குப் புரியும்படி சொல்லப்படும் பாங்கு அருமை.*

***"குறுக்கே வரும் பூனையால்***
***சரியில்லை சகுனம் என்று***
***வெறுப்புடனே பேசுவோம்..."***

*என்று மனிதர்களும்,*

***"எங்கே நடந்து சென்றாலும்***
***குறுக்கே வரும் மனிதர்கள்"***

*என்று பூனைகளும் கருதுவதாக, பகுத்தறிவுக்கு ஒவ்வாத சகுனம் பார்ப்பதைக் குறிப்பிடும் பாங்கு பாராட்டுக்குரியது. கவிஞர் பிராணிகளிடம் காட்டும் பேரன்பை,*

***"வேடந்தாங்கல் பூமியிலே***
***வேராய் இருந்து வாழுது***
***காடு போல மரங்களிலும்***
***கிளையாய்ப் பறவை தெரியுது"***

*–இவ்வரிகள் உவமை நயத்துடன் கண்களுக்கும், கருத்துக்கும் இனிமை சேர்க்கின்றன.*

> **'ஊரில் நூலகம் திறப்போமே**
>
> ..........................................................
>
> **நல்லன தீயன இருந்தாலும்**
> **நல்லது கற்றே வளர்ந்திடுவோம்"**

*–இவ்வரிகள் கற்க கசடறக் கற்பவை என்ற குறள்வரிகளை நினைவூட்டுகின்றன.*

*கவிஞர் தாய்மீதும், பெரியோர்கள் மீதும், தாய்நாட்டின், தாய்மொழி மீதும் கொண்ட பற்று ஆங்காங்கே மிளிர்கிறது.*

*மக்கள் மனத்தை உலுக்கிய கும்பகோண நிகழ்ச்சி, அதிர வைத்த சுனாமிப் பேரலை அழிவுகள் பற்றிய வரிகளில் குழந்தை மனத்தோடு சொல்லும் விதம் அருமை.*

*கூண்டுக் கிளிக்கும் விடுதலை வேண்டும் என்று கேட்கும் கவிஞர் ஒரு விடுதலை விரும்பி...! நாட்டை,*

> ***"சந்தையாகக் கருதிடுவர்***
> ***அந்நியரை அழைத்திடுவர்***
> ***மூலதனம் குவித்திடுவர்–முடி***
> ***ஆட்சிக்கும் வித்திடுவர்"***

*–இவ்வரிகள் நாட்டுப்பற்று குறித்து யோசிக்க வைக்கின்றன. அன்று வியாபாரம் செய்யப் புகுந்தவர்களே நாட்டை ஆள, நாம் அடிமைப்பட்டது வரலாறு. இன்று உலகமயம் என்ற பெயரால் அந்நியர்களின் மூலதனம் வேர் விட உரிமை தந்தால் மீண்டும் ஒரு சுதந்திரப் போராட்டம் நடத்த வேண்டி வரும் என்று கூறும் எச்சரிக்கை ஒரு தீர்க்க தரிசனமாகும்.*

*சிறுவர்களின் கருத்தை ஈர்க்கும் இக்கவிதை நூல் எளிய நடையில் எல்லோரும் புரிந்து பாராட்டும் வகையில் அமைந்துள்ளது.*

*வளர்க அவரது முயற்சிகள்.*

*அன்புடன்,*

*கீழ்க் கொடுங்காலூர்,*
*வந்தவாசி - 604 403.*

***இரா.மனோன்மணி,*** *எம்.ஏ., பி.எட்.,*
*தமிழாசிரியை (ஓய்வு)*

# என்னுரை

*குழந்தைகளின் வானத்தில்...*

*“குழந்தை உலகில் குடிபெயர்வது எல்லோருக்கும் இயலாது” மெத்தப் படித்தவர்களும், சுற்றித்திரிபவர்களும் குழந்தைகளின் உணர்வை குறிப்பாய்ப் புரிந்து கொள்ள மறுப்பவர்கள் என்றே சொல்லலாம். இயந்திர வேக வாழ்க்கைக் கதிக்குள் இவர்களின் பாசவலை பெரும்பாலும் அறுந்தே கிடக்கிறது. என்பதும் உண்மை.*

*பெண்களின் பாடு இதில் பெருமைப்படும் ‘பாடு’ தான்! இருந்தாலும் பல்வேறு இல்லம் சார்ந்த பணிகளோடும் அலுவலகப் பணிகளுக்குமிடையில் மழலைகளின் மனசுக்கேற்ற உயிருள்ள பொம்மைகளாக அம்மாக்களே அதிகம் இடம் பெறுகிறார்கள்.*

*குழந்தைகளின் உலகத்தில் காவியங்கள், புராணங்கள், புனைகதைகள், நாட்டுப்புறப் பாடல்கள் என பல்சுவை நிகழ்வுக ளோடும் உறக்கம் கலைந்து எழுந்த குழந்தை.. இரவு உறங்க வைக்கும் வரை பாட்டிகளால், தாத்தாக்களால் அன்னையர்களால் புதுப்பித்தும், அதுவே குழந்தைகளை இயக்கிடும் கருவிகளாகவும் இருக்கிறது. இடையிடையில் உயிரற்ற பொம்மைகளும் இன்றும், மின், நுண்கருவிப் பொம்மைகளும் தங்களோடு சேர்ந்து விளையாடி குழந்தை உலகத்தை மகிழ்விப்பதும் உண்மைதான்!*

*நம்மில் எத்தனை பேர் குழந்தைகளோடு ஐக்கியப்பட்டு உணர்வுகளுக்கு உள்ளம் தருகிறோம் என்று எண்ணிப்பார்த்தால் அதுவும் குறை எண்ணிக்கை தான். இதை மீறி ஐக்கியப்பட்டு ஆனந்தப்படும் அப்பாக்கள் மகிழ்ந்து கொள்ளலாம். பூக்களின் மென்மையிலும் குழந்தைகளின் உலகம் மிகவும் மென்மையானது. அது தாயின் மெல்லினத்தோடும், தந்தையின் வல்லினத்தோடும்*

வளர்ந்து மணம் கமழும் இல்லத்தின் மதிப்புடை செல்வமாக இருக்கும். இந்தச் செல்வங்களே குடும்பத்தின் வாழ்வின் வளர்ச்சிக்கு ஆதாரமான அடிப்படைச் செல்வமாகும். இந்தச் செல்வங்கள் பிஞ்சுகளாய் - நடைவண்டி பழகி - நடந்து - பள்ளிக்கூடம் செல்லும் வயதில் நினைவுப் பாதை இவர்களுக்கு மெல்ல மெல்ல திறக்கிறது.

இந்தப் பாதையில் அ... ஆ... தொடங்கி க.. கா...எனும் உயிர் மெய் எழுத்துக்களின் அடிச்சுவட்டிலிருந்து தமிழும் A...B...C.D... எனும் ஆங்கில எழுத்துக்களினூடே அந்நிய மொழித் தாக்கமும் கல்விக்கூடங்களில் கலவரப்பட்டுப் போகிறது. எழுத்துக்கள் சேர்ந்து வார்த்தைகளும், வார்த்தைகள் சேர்ந்து வாக்கியங்களும் தங்களுக்குள் வரிசைப்படுத்திக் கொண்டு பாடப் புத்தகங்களில் காணப்படுகின்றன.

படித்து உற்சாகப்படும் குழந்தைகளின் மனங்களில் தமிழ்ப் பாடலோ, ஆங்கிலப் பாடலோ தங்களுக்குள் தாலாட்டாய் அமையும். சிறுவர்களுக்கான இலக்கியங்களில் கதை, பாடல்கள் சித்திரங்கள் சிறுவயது தொட்டே அவர்களை வசீகரித்து விடும். பறவையினம், விலங்கினங்களின் கதை, பாடல்களும் ரசிக்க வைக்கும். உயிரினங்கள் குறித்த பிம்பத்தைக் குழந்தைகளின் மனதில் பதிய வைக்கும்.

சிறுவர் இலக்கியத்தின் பாடல்கள் பல்வேறு எழுத்தாளர் களால் எழுதப்பட்டு அதன் தொடர்ச்சியான கண்ணிகள் இன்றும் தொடர்கின்றன. குறிப்பாக அழ.வள்ளியப்பா, தணிகை உலக நாதன் போன்றவர்களின் பாடல்களோடு இன்றைய சிறுவர் இலக்கியத்தில் என்.நன்மாறன், பாவலர் பல்லவன், சி.விநாயக மூர்த்தி, ஓவியக்கவி மலர்மகன், ந.க.துறைவன், படைக்களப் பாவலர் துரை மூர்த்தி அண்ணா கணேசன் உள்ளிட்டவர்களின் பாடல்களும், நாளிதழ்களின் இணைப்பாக வரும் சிறுவர் தங்கமலர், சிறுவர் மணி மற்றும் மாத சிறுவர் சஞ்சிகைகளில் வரும் பாடல்களை எழுதிய கவிஞர்களும் எனக்கு இத்தொகுப்பின் பாடல்களை எழுத ஆகர்ஷித்தவர்கள் என்று சொல்வதில் மிக்க பெருமையே!

கவிதை எழுத அசைபோடும் குழந்தைகளின் வானத்தில் இப்பாடல்கள் நட்சத்திரங்களாய், மூன்றாம் பிறையாய், முழு நிலவாய் ஒளிர்ந்தால் மிகுந்த மகிழ்ச்சியடைவேன். இந்நூலுக்கு அழகுற வாழ்த்துரை வழங்கிய சட்டமன்ற உறுப்பினர் தோழர் என்.நன்மாறன், திருக்குறள் குடும்பத்தின் ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியை இரா.மனோன்மணி மற்றும் அழகுற இந்நூலை தயாரித்த கவிஞர் மு.முருகேஷ் ஆகியோருக்கும் என் நன்றிப் பூக்கள்.

தோழமையுடன்,

**ஆரிசன்**


‘தமிழ்’

## உந்தன் பின்னால் உலகம்

சிட்டுக்குருவி ஜோடியாய்
வானத்திலே பறக்குது...
பட்டுக் கண்கள் பார்த்ததும்
பசியும் மறந்து போகுது!

இணையாய்ச் சுற்றும் குருவிகள்
இன்ப வாழ்க்கை வாழுது...
மனிதப் பண்பில் நாமுமே
நல்ல வாழ்க்கை வாழுவோம்!

சண்டையில்லா வீட்டிலே
சாந்தம் நிலவும் பாரம்மா...
மூளையிலே அறிவையும்
தேடிச் சேர்த்து வையம்மா!

மதியுள்ள மானுடம் என்றும்
சதியை வெறுத்து ஒதுக்கணும் ..
நாலு வார்த்தை பேசி நம்மை
நல்லது செய்ய வைக்கணும்!

ஆசை தீரப் பேசணும்
அமைதி எங்கும் நிலவணும்
ஓசையின்றி உலகமே
உந்தன் பின்னே நடக்கணும்!

## படிப்பில் கவனம் வேணும்

*கூட்டுக் குடும்பம் இருக்கணும்...*
*கூடி மகிழ்ந்து பேசணும்!*
*வீட்டுக்குள்ள சண்டைகள்...*
*விலக்கி வைத்துச் சிரிக்கணும்!*

*ஒற்றுமையாய் வாழணும்...*
*உறவு சேர்ந்து புகழணும்!*
*அச்சமின்றி நடக்கணும்...*
*உச்சி மோந்து கொடுக்கணும்!*

*படிப்பில் கவனம் செலுத்தணும்....*
*பாழும் தூக்கம் வெறுக்கணும்!*
*விடியற்காலை இருட்டில் தான்...*
*வெளிச்சம் போட்டுப் படிக்கணும்!*

*அறிவு தீபம் ஒளிரணும்...*
*அதுக்கு நீயும் படிக்கணும்!*
*அப்பா அம்மா சொல்வதை...*
*அறிந்து நீயும் நடக்கணும்!*

*பகுத்தறியும் பக்குவம்...*
*படிக்கும் போதே வந்திடும்!*
*வகுத்துப் பார்த்து நீயுமே...*
*ஈவில் விடை காணணும்!*

*நல்லர் நட்பில் சேரணும்*
*தெளிவாய்ச் சிந்தனை மாறணும்*
*பல்லோர் புகழ வாழணும் - பேரும்*
*பாரில் என்றும் நிலைக்கணும்!*

## சின்னப் பாப்பா –1

*சின்னச் சின்ன பாப்பா*
*செக்கச் சிவந்த பாப்பா*
*மண்ணில் ஆடும் பாப்பா*
*மனசு நெகிழ்ந்து கேட்பாள்!*

*பொன்னும் பொருளும் வெறுப்பாள்*
*மண்ணும் மணியும் கொடுப்பாள்*
*கண்ணில் மணியாய் இருப்பாள்*
*காண்பவர் நட்பை வளர்ப்பாள்!*

*கஞ்ச மனம் ஒழிப்பாள்*
*செல்வ குணம் சேர்ப்பாள்*
*அஞ்சும் தீமை அழிப்பாள்*
*பஞ்சில் நெருப்பை அணைப்பாள்!*

## மகிழ்ச்சி

*பொங்கும் கடலைப் பாரு*
*புகழ்ந்து கானம் பாடு/*
*தங்க மலையைப் பாரு*
*மகிழ்ந்து நீயும் ஏ(கூ)று!*

*ஊதும் சங்கு கடலிலே*
*சூதும் இன்றிக் கிடக்குதே.!*
*தூது சொல்ல வந்திடும்*
*துடுப்புடனே படகுகள்..!*

*சூரியன் உதித்த பொழுதிலே*
*பனியும் ஓடிப் போனதே..!*
*மாரி பெய்யும் நாட்டிலே*
*பயிர் களெல்லாம் செழிக்குதே.!*

*சின்னக் குட்டை இருக்குதே...*
*காகம் அதில் குளிக்குதே.!*
*உடம்பு சிலிர்த்து எழுந்துமே*
*இறக்கை உதறிப் பறக்குதே..!*

*கூடி வரும் காக்கைகள்*
*குளித்து சுகம் காணுதே..!*
*ஆடிப்பாடி சிரித்துமே*
*அன்பைக் காட்டி மகிழுதே..!.*

## யாருக்கு சகுனம்?

குட்டி பூனைக் குட்டி-அது
மீசைக்காரக் குட்டி!
பால் இருக்கும் இடத்திலே
பாய்ந்து குடிக்கும் குட்டி!

கண்ணிலே கவர்ச்சிதான்
காண்போருக்கு மகிழ்ச்சிதான்!
சிடுசிடுன்னு பாய்ந்துபோய்
பானை உருட்டி குடிக்குமே!

வீட்டிலிருந்து கிளம்பினால்
குறுக்கே வரும் பூனையை
ரோட்டில் இருந்து சொல்லுவார்
சகுனம் சரியில்லை என்று...

பாவம் அந்தப் பூனைதான்
வெளியே சுற்ற முடியல.!
எங்கே நடந்து சென்றாலும்
குறுக்கே வரும் மனிதர்கள்!

நல்லதையே நினைப்போமுங்க
நன்றி சொல்லி மகிழ்வோமுங்க
வீட்டுத் தொல்லை எலிகளை
விரட்டிப் பிடிக்கும் பூனைக்கு!

வீட்டுக்குள்ளே அமைதியாய்
பாட்டுப் பாடும் பூனையை
நாட்டிலுள்ள குழந்தைகள்
மீசை வியந்து பார்க்குமே!
கோபமின்றிப் பூனையும்
பொறுமையோடு இருக்குமே...
கோலிக்குண்டு கண்களால்
முறைத்து அதுவும் பார்ப்பேனே!

## காக்கை குருவி எங்கள் ஜாதி

*மயிலே நீயும் ஆடாயோ*
*மழையை அழைத்து வாராயோ!*
*தோகை விரித்துக் களிப்பாயோ*
*தோல்வி யழித்து வெல்வாயோ?*

*சிட்டுக் குருவி நீயும்தான்*
*சிறகு விரித்துப் பறப்பாயோ*
*கன்னல் மொழியின் இனிமையிலே*
*கனிந்த பார்வை பெறுவாயோ?*

*குயிலே நீயும் பாடாயோ*
*குருவிக் கூட்டம் சிரித்திடவே!*
*இசையை மானுடம் அறிந்திடவே*
*இன்ப ஊற்றாய் இருப்பாயோ?*

*கிளியே நீயும் பேசாயோ*
*கூண்டை விடுத்து வாராயோ!*
*இன்பத் தமிழில் பேசாயோ*
*இனிய உறவை வளர்ப்பாயோ?*

*பறவை இனங்கள் எல்லாமே*
*தங்கள் கதையைச் சொல்லிடுதே!*
*பார்க்கும் மனிதர் நாமுமே*
*பறந்து சென்று கேட்போமே...!*

## பட்டாம்பூச்சி பறந்தாலே...

*பட்டாம் பூச்சி பறந்தாலே*
*பறந்து திரியும் ஆசை வரும்!*
*ஓய்வு நேரம் வந்தாலே*
*இறகுகள் மூடி உறங்கிவிடும்!*

*பறவைகள் காத்து இருந்திடுமே*
*பட்டாம் பூச்சி உணவுக்கும்*
*கறவைக் கன்றுகள் போலவே*
*கறந்து குடிக்கும் பூக்களிலே!*

*பகலில் மட்டும் பறந்திடுமே*
*பதினைந்தே நாட்கள் வாழ்ந்திடுமே*
*கண்ணிமைகள் இன்றி ஓய்வெடுத்து*
*இரவுப் பொழுதைக் கழித்திடுமே!*

*மரண காலம் எது என்றால்*
*மழையின் காலம் என்றிடுமே*
*நனைந்து பாரம் சுமந்திடுமே*
*சுமையில் இறகுகள் உதிர்ந்திடுமே!*

*தழையோ இலையோ வீடாகும்*
*தத்திச் செல்லும் கூடாகும்*
*பார்ப்பவர் மனதைக் கிள்ளிவிடும்*
*சத்தமின்றிப் பறந்து விடும்!*

*பூக்கள் மீதே உறவு கொண்டு*
*தேனை உறிஞ்சிக் குடித்துவிடும்*
*பாக்கள் பாடும் புலவரையும்*
*பறக்க வைத்து மகிழ்ந்துவிடும்..!*

## ஊரில் நூலகம் திறப்போமே!

*ஊரில் நூலகம் திறப்போமே*
*உலக அறிவை வளர்ப்போமே - தீ*
*ரதத்தில் கலவரம் உண்டாக்கும்*
*பாதகக் கொலையை வெறுப்போமே !*

*அறிவை வளர்க்கும் நூல்களையே*
*அறிந்து நாமும் படித்திடுவோம் -பா*
*மனிதம் வளர்க்கும் பண்புகளை*
*மதித்து நாமும் போற்றிடுவோம் !*

*நூலகம் முழுதும் புத்தகங்கள்*
*நல்லவை என்றே நினைத்திடுவோம்*
*நல்லன தீயன இருந்தாலும்*
*நல்லது கற்றே வளர்ந்திடுவோம் !*

*அறிவை வளர்க்கும் நூலகங்கள்*
*மதியைப் பட்டை தீட்டிடுமே*
*அனுபவத்தோடு நூலறிவை*
*ஆளும் அறிவில் பூட்டிடுவோம் !*

*தந்தை சொல்லும் மந்திரமே*
*தாயின் பாச வலைக்குள்ளே*
*மந்தை ஆடுகள் போலன்றி*
*மனிதம் ஒற்றுமை கட்டிடுவோம் !*

*நூலைப் படிக்கும் இடம்தானே*
*நூலகம் என்று சொல்வோமே*
*காலைக் கடனை முடித்ததுமே*
*கண்ணில் தெரியணும் புத்தகமே !*
*கூரை வீட்டு ஓலையிலும்*
*குந்திப் படிக்கும் புத்தகமே*
*படிக்கும் பிள்ளை ஆற்றலையும்*

பாங்காய் வளர்த்திட வேணுமே !

குடும்பம் முழுதும் படித்திடவே
குட்டி நூலகம் திறக்கணுமே
கட்டும் வீட்டில் நாமுமே
நூல்களை வாங்கிக் குவிக்கணுமே !

வீட்டில் நூலகம் வைப்போமே
விளக்குகள் போலதைக் காப்போமே !
அறிவுச் சுடரை அணைக்காமல்
அன்னை தேசத்தை வளர்ப்போமே !

## மழை வந்ததே..!

கோடை மழையும் வந்தது
பூமி குளிர்ந்து போனது!
பாடும் பறவைக் கூட்டமும்
வானில் பாடித் திரிந்தது!

மண்ணின் வாசம் வந்தது
மணத்தில் அதுவும் சிறந்தது!
கண்ணும் குளிர்ச்சி கண்டது
கனலும் குறைந்து போனது!

பிளவில் இருந்த பூமியும்
ஒன்று சேர்ந்து சிரித்தது!
கனவில் கண்ட இன்பமும்
காட்டில் வாசம் தந்தது!

தாகத்தோடு திரிந்ததும்
காடு நோக்கிச் சென்றது!-கரு
மேகக் கூட்டம் இன்றியே
கோடை சூடும் தந்தது!

கோடை வெப்பம் போலன்றி
குளிர்ந்தே நாமும் வாழுவோம்
உறவுகள் என்றும் சிறந்திடவே
உண்மை நேசம் காட்டிடுவோம்!

## கனிந்து சுரக்கும் கல்வி

*கடினமாக உழைக்க வேணும்*
*கருத்தில் வையடா - நீ*
*கால நேரம் பார்க்காமல்*
*கல்வி பயிலடா !*

*படித்துப் பட்டம் வாங்கிடவே*
*பசியும் கொள்ளடா - நீ*
*கடைச் சரக்காகும் கல்வியினை*
*தடுத்து நில்லடா !*

*மடி முழுதும் பாலிருக்கும்*
*பசுவைப் பாரடா -நீ*
*மூளை யெங்கும் அறிவைச் சுமந்து*
*உலகை வெல்லடா !*

*வேர் முழுதும் மறைந்து நிற்கும்*
*விருட்சம் தானடா - நீ*
*வீதி யெங்கும் நிழலை தரும்*
*குடையாய் மாறடா!*

*கல்வி கற்று உயர்ந்து நிற்க*
*வேணும் தானடா - நீ*
*கண்ணிமையாய்ப் பெற்றவரை*
*காத்து நில்லடா !*

*உலகம் போற்ற வாழ்ந்திடவும்*
*உறுதி கொள்ளடா - நீ*
*உயரே பறந்து சென்றிடவே*
*கல்வி சிறகு தானடா!*

## ஜிகு ஜிகு ரெயில்

*ஜிகு... ஜிகு... ரெயிலில்*
*பயணம் போவோம்*
*மிகுமிகு வேகத்தில் !*

*தட.. தட.... சத்தம்*
*கேட்கும் தூரம்*
*கனவுகள் வானத்தில் !*

*டப... டப... என்ஜின்*
*துவக்கும் வேகம்*
*உறவுகள் எண்ணத்தில் !*

*மட.. மட.... வென்றே*
*செல்லும் போது*
*மக்கள் பயணத்தில் !*

*குடு... குடு... வென்றே*
*ஓடி வந்து*
*ஏறிப் போவோமே !*

*ஜிகு... ஜிகு... ரெயிலின்*
*பயணத்திலே நாம்*
*சேர்ந்து போவோமே !*

## குவினாகும் கவின்!

*கவினுக்குட்டி... கவினுக்குட்டி*
*தூங்கி எழுந்தியா! – நீ*
*காலைக் கடன் முடிச்சதுமே*
*படிக்கப் போறீயா...*

*தாத்தா பாட்டி துணையோடு*
*தாவிப் பறப்பாயா! – நீ*
*காத்தா பறந்து புத்தகப்*
*பையைச் சுமந்து வாறீயா..!*

*அப்பா அம்மா ஸ்கூட்டரிலே*
*குலுங்கிப் போறீயா – நீ*
*தப்பா பாடம் படிக்காம*
*பரிசு வாங்குவியா...*

*சின்னத்திரை வழி உலகை*
*நல்லாப் பார்த்திடு – அதில்*
*சிறுவர்களின் விஞ்ஞானம்*
*சிறப்பாய் அறிந்திடு*

*கல்வி கற்று நாளை நீயும்*
*கவினு ஆகணும் – உன்*
*அறிவு தீபம் மூளையிலே*
*ஒளிர்ந்து சிரிக்கணும்!*

*பெயரில் மட்டும் கவினு என்று*
*இருந்து விடாதே – நீ*
*அறிவில் சிறந்தும் வளர்ந்தே தான்*
*ஆளும் 'குவினாய்' ஆகணும்!*

## தமிழே சொந்த மரம்

*அன்பு மரம்*
*ஆசைமரம்*
*அனைத்தும் இருக்கும்*
*பாருங்க !*

*இன்ப மரம்*
*ஈகை மரம்*
*இவை யனைத்தும்*
*கேளுங்க !*

*உண்மை மரம்*
*ஊட்டி மரம்*
*உவகை கொள்ளும்*
*பாருங்க !*

*எத்திசைக்கும்*
*ஏங்கு மிந்த*
*ஐந்து பூதம் தானுங்க !*

*ஒட்டுறவு*
*ஓங்கு புகழ்*
*ஔவை சொல்லு தானுங்க!*

*அஃதில் தமிழும் வாழ்ந்திருக்கும்*
*அன்னை மரம் பாருங்க*
*எந்த மரம்*
*சொந்த மரம் கேளுங்க!*

*தமிழ் சொந்த ம(ர)றம்*
*வாழ நீங்க நில்லுங்க*
*தமிழால் யாவரும் சிறப்பார்*
*என்றே நீங்களும் சொல்லுங்க..!*
*படிப்பால் வாழ்வை வெல்லுங்க.!!*

## பூத்து குலுங்கும் பூமி

பாரத பூமி நம் பூமி
பார்க்க எவரும் வரும் பூமி !

நாமதன் புதல்வர் அதனாலே
நன்மைகள் செய்தே உயர்ந்திடுவோம்!

எம் மதமெல்லாம் சம்மதமே - என
மக்கள் ஒற்றுமை காத்திடுவோம் !

உழைப்பால் உயர்ந்த பூமியென்று
உலகம் போற்ற வளர்த்திடுவோம் !

ஆறுகள் நதிகள் எல்லாமே
அன்பின் ஊற்றாய்ப் பாய்ந்திடுமே !

காடுகள் சோலைகள் எல்லாமும்
கருணை மழையில் நனைந்திடுமே !

ஆடவர் பெண்டிர் அனைவருமே
விரும்பிடும் நமது தாய் பூமி !

மழலைகள் மகிழ்ச்சி பொங்கிடவே
பூத்துக் குலுங்கும் நம் பூமி !

பாரத பூமி நம் பூமி
பார்க்க எவரும் வரும் பூமி !

## சிகரம் மீது ஏறு..!

*காற்று ஊதிப் பாரு*
*பந்தாய் மாறும் கூறு !*

*உதைத்து நீயும் பாரு*
*உயரப் பறக்கும் கூறு !*

*வாழ்க்கை உயரும் பாரு*
*பந்து உயரம் கூறு !*

*ஓடி உதைத்துப் பார்த்து*
*பறக்கும் தூரம் கூறு !*

*பந்துக்குள்ளே காற்று*
*வாழ்க்கை யென்று கூறு !*

*உதைத்துப் பறக்கும் பந்துபோல்*
*உதைத்துப் பார்க்கும் சுற்றமே !*

*உறுதியான உழைப்பிலே*
*நம்பிக்கையில் வெல்லுவோம் !*

*வாழ்வின் சிறப்பைக் கூறியே*
*சிகரம் மீது ஏறுவோம் !*

## வானத்திலே ஊர்வலம்

*ஆமை வேக முயலு*
*இங்கே பாரடா! - மயிலும்*
*தோகை விரித்து ஆடும்*
*வனம் தானடா!*

*பூனை நடை யானை*
*வேகம் பாரடா! - ஆலைச்*
*சங்கொலியை நீயும்*
*மகிழ்ந்து கேளடா!*

*துள்ளும் நரி பாயும்*
*மானும் பாரடா! - பார்வை*
*தூண்டில் மீனா*
*இழுக்குமெனக் கூறடா!*

*சிங்கம் புலி சிறுத்தை*
*யெல்லாம் பாரடா! - வெற்றி*
*சிறக்கவுமே கற்றுத் தரும்*
*பாடத்தையும் படியடா!*

*முதலை வேக ஆமை*
*இங்கே பாரடா*
*பாலை வனத்திலெங்கும் தேங்குதே*
*கானல் நீரடா*

*பசுவின் வேக புலியும்*
*இங்கே பாரடா! - களி*
*நடனம் புரியும்*
*கழுதைக் கூட்டம் பாரடா!*

*மனித வாழ்வில் மாண்பு*
*இருக்கும் கூறடா! - மதித்துப்*
*புகழும் தேடிவரும்*
*'படிப்பு மன்றம்' தானடா!*

## சிரிப்புப் பூத்திருக்கும்

சின்னச் சின்ன பூக்கள்
சிறகு விரிக்கும் பூக்கள்

வண்டு தேடும் பூக்கள்
வாசம் வீசும் பூக்கள்

கண்டு சிரிக்கும் பூக்கள்
விண்டு உரைக்கும் பூக்கள்

காற்றசைவில் பூக்கள்
கண்ணடிக்கும் பூக்கள்

கன்னம் போல பூக்கள்
மென்மையான பூக்கள்

கிள்ளை போல பூக்களும்
கொள்ளை கொள்ளும் பூக்கள்!

மலர்ந்து சிரிக்கும் பூக்களே
மனதுக் கினிய பூக்களாம் !

## 'பாரதம்' பாரு!

*பாரதம் பாரு - நம்*
*பாரதம் பாரு !*

*பனிமலை தொடங்கி*
*பசும் புல்தரை வரையில*
*பளிச்சிடும் உண்மை*
*தெரியது பாரு !*

*தெளிந்த நதியும்...*
*குளிர்ந்த ஆறும்...*
*பாய்ந்து செல்லும்*
*அழகைப் பாரு ! - நீ*
*தெளிந்து சிறக்கும்*
*அறிவுச் சுடராய் மாறு !*

*காடுகளெங்கும்*
*அடர்ந்து இருக்குது*
*கல்விச் சாலைகள் பாரு ! - அதில்*
*வாசம் வீசும்*
*சந்தன மரங்களால்*
*மாணவச் செல்வங்கள்*
*படித்துச் சிறக்குது கூறு !*

*தேசம் சிறக்க...*
*தீயவை விலக்க.*
*சொல்லிக் கொடுத்தது யாரு?*
*நம் தேசத் தந்தை*
*மகாத்மா "காந்தி தாத்தா*
*என்றே நீயும் கூறு!*

## பறவைச் சுற்றுலா

*வித விதமாய்ப் பறவைகள்*
*விண்ணைச் சுற்றிப் பறக்குது!*
*வேடந்தாங்கல் அழைத்ததும்*
*விரைந்து வந்து சேர்ந்தது !*

*கோடையிலே பறவைகளும்*
*கூட்டம் போட்டுப் பேசுது!*
*குளுகுளுன்னு சூழலையும்*
*வேடந்தாங்கல் தந்தது !*

*உலகமெங்கும் பறவை இனம்*
*ஒன்று சேர்ந்து மகிழுது!*
*கலகமின்றி வாழ்வதாக*
*பறவை கூட்டம் சொன்னது !*

*வண்ண வண்ணப் பறவைகளும்*
*வானத்திலே சுற்றுது !*
*எண்ணத்திலும் மாற்றம் செய்து*
*காண்பவரைக் கவருது !*

*வேடந்தாங்கல் பூமியிலே*
*வேராய் இருந்து வாழுது !*
*காடு போல மரங்களிலும்*
*கிளையாய்ப் பறவை தெரியுது !*

*கான மெங்கும் கலை எழிலை*
*பறவை யினம் தந்தது !*
*வானமெங்கும் நட்சத்திரங்கள்*
*பறவை யினத்தைக் கொஞ்சுது !*
*காண வரும் கூட்டத்தையும்*
*பறவை யினம் ரசித்தது !*
*தேனும் பாலும் திகட்டாமல்*
*வேடந் தாங்கல் இசைத்தது !*

## விலகிடும் அம்மை

அம்மை அம்மை
பெரி யம்மை !
உடலில் அழுக்கால்
வரும் அம்மை !

சிறிய பெரிய
அம்மை யாம் !
உடலைச் சுத்தம்
செய்யும் தன்மையாம் !

கழிவால் வந்த
அம்மையாம் !
உடலை உறுதியாக்கும்
அம்மை யாம் !

முத்து முத்தாய் உடலிலே
அழியா வடுக்களும் தருகின்ற
உயிரில் கலக்கும் அம்மையாம் !

முழுக்க முழுக்க வந்திட்டே
அழகு முகத்தைக் கெடுத்திடுமே !

சுத்தமாக இருந்தாலும்
தூய காற்றில் வசித்தாலும்
சுற்றுச் சூழல் சிறந்தாலும்
சுத்தமான குடிநீரோடு
சூழும் வாழ்க்கை இருந்தாலே
வாழ்வியல் தெரிந்து விலகிவிடும்
அம்மை நோயும்...
வீட்டுக்கு வெளியே புலம்பிவிடும் !

## அரும்பு

சின்னச் சின்ன அரும்புதான்
செல்லமான அரும்பு தான்
மின்னல் சிரிப்பு அரும்பு தான் - உன்
மேனியழகும் அரும்பு தான் !

கன்னல் மொழி அரும்பு தான்
கனிந்த பார்வை அரும்பு தான்
என்னமெல்லாம் விரும்பியே - நீ
கற்கும் கல்வியும் கரும்பு தான் !

அரும்பு அன்பு கொடுக்குமே
அரும்பு இன்பம் அளிக்குமே
அரும்பு நம்மை அழைக்குமே
அணைத்துச் சேர்த்துச் சிரிக்குமே !

## வானத்திலே நிலா

*கனவு வானில் பறந்து நானும்*
*வெண்ணிலாவைச் சுற்றிப் பார்த்தேன் !*
*வெண்ணிலாவில் இருந்து கொண்டே*
*வீரத்தையும் எண்ணிப் பார்த்தேன் !*

*சிறகு விரித்துப் பறந்து கொண்டே*
*பால் நிலவைத் தொட்டு பார்த்தேன்!*
*சின்ன நிலாவின் பேரழகை*
*சுற்றிச் சுற்றி இரசித்து விட்டேன் !*

*கன்னி நிலா கனவினிலே*
*வெள்ளி ஒளி வீசக் கண்டேன் !*
*சின்ன நிலா சிக்கெனவே*
*சிறைக்குள்ளும் அடைக்கக் கண்டேன் !*

## மண்ணுக்கும் விலங்கு

*பாரதம் நம் பாரதம் - நம்*
*அனைவருக்கும் சொந்தமான*
*இனிய பாரதம் !*

*பொன் விளையும் பூமிதான்*
*நமது அன்னை பூமி - அதை*
*கண் வைத்தே தாக்குகிடுது*
*அமெரிக்கா (ஆ)சாமி !*

*நம்ம நாட்டை காவு கொடுக்க*
*ரெண்டு கட்சி போதுங்க ! - அன்னை*
*தேசம் காக்கவுமே*
*மீதிக் கட்சி சீறுங்க !*

*சந்தையாகக் கருதிடுவர்*
*அந்நியரை அழைத்திடுவர் - மூல*
*தனம் குவித்திடுவர் - முடி*
*ஆட்சிக்குமே விதைத்திடுவர் !*

*உலகமயம் என்பதிலே*
*உயிரையும் விதைத்திடுவர் ! - வளரும்*
*தேசம் என்று சொல்லி*
*வாழ்வையுமே அழித்திடுவர் !*

*சின்ன அரும்பு நமக்குந்தான்*
*உலகமயம் எதிரிங்க - மண்ணிலுமே*
*'அடிமை விலங்கை'' மாட்டும்*
*உண்மைதானே கூறுங்க !*

## ஐந்தும் ஆறும்

*பறவை பறவை பறவை*
*பட்டுப் பறவையே ! - சிறகு*
*விரித்து அருகிலே*
*நீயும் வருகவே !*

*நட்டு வைத்தேன் செடியினை*
*நிழலில் தங்கவே - தட்டு*
*வைத்து காலுடன் - நீ*
*செய்தி கொண்டு வருகவே !*

*விதைத்து வைத்து விதைகளை*
*கொத்தித் தின்ன வா - சிட்டுப்*
*பறவை துணைகளோடு*
*பறந்து திரிந்து வா !*

*வானத்திலே பறந்து பறந்து*
*வயது கூடுதோ - உன்*
*வாஞ்சையான காதலிலே*
*இளமை திரும்புதோ !*

*உன்னைப் போல பறக்கவுமே*
*என்னால் முடியல - ஆறறிவு*
*மனிதனுக்கு இன்னும்*
*பகுத்தறிவு போதல !*

## பாயும் படகு

*நிலா நிலா பாரு*
*நிலாச் சோறு கேளு !*
*பலா பலா பாரு*
*பழம் இனிக்கும் கூறு !*

*மலை மேலே ஏறு*
*மணம் கமழும் பாரு !*
*கலை யாகப் பாரு*
*கவின் அதனைக் கூறு !*

*கடல் அழகைப் பாரு*
*கப்பல் மேலே ஏறு !*
*பாயும் படகைக் பாரு*
*விரட்டி அழிக்க சீறு !*

*பறவை அழகைப் பாரு*
*பறக்க நீயும் கேளு*
*மிரட்டும் மிருகம் பாரு*
*மிதித்து துவைக்கும் கூறு*

*அன்பு சிறக்கப் பேசு*
*அதட்டி நீயும் கேளு - உன்*
*அன்னை சிறப்பைக் கூறு*
*கண்மணியாய் போற்றிப் பாடு!*

## கனவு காண்போம்

கனவு காணணும்
கனவு காணணும்
கலாம் மாமா
சொன்ன சொல்படி
கனவு காணணும்
கனவு காணணும் -நீ

கல்விச் சாலையே
தொழிற்சாலையாய்
கனவு காணணும் - அதில்
படித்து உழைத்தே சிறக்க நீயும்
கனவு காணணும் - நீ

மூளை யெங்கும்
புத்தகப் பொதியைச்
சுமக்க வேண்டிக்
கனவு காணணும் - அதை
முதுகில் மாட்டி ஆணி
அடிக்காமல் இருக்க
கனவு காணணும் -நீ

அன்போடு அறிவாய்
இருக்க நீயும்
கனவு காணணும் -நீ
அன்னை பேச்சைத்
தட்டாமல் இருக்கக்
கனவு காணணும் - நீ

தந்தை சொல்லே
மந்திரமாகக்
கனவு காணணும் - நீ

மந்தை மாடாகாமல்
மனுசனாய் இருக்கக்
கனவு காணணும் - நீ

பாடம் நடத்தும்
குருவை மதிக்கக்
கனவு காணணும் - நீ
தந்தை தாய்
குருவையுமே கடவுளாகக்
கனவு காணணும் - நீ

கடவுள் என்றொரு
உருவம் இல்லையெனக்
கனவு காணணும் - நீ
கடின உழைப்பே
கண்ணில் தெரியக்
கனவு காணணும் - நீ

கட்டுத் தறியை
மிதிக்க நீயும்
கனவு காணணும் - நீ
கடலை மீதேக்
கப்பல் விடவும்
கனவு காணணும் - நீ

அறிவியல் அறிவை
வளர்த்து நீயும்
அறிஞனாகணும் - அதற்கு
கருத்தாய்க் கல்வி
கற்க நீயும்
கனவு காணணும் - நீ

மருந்தாய் மாறி
சமூகப் பிணியைப்
போக்கும் அறிஞனாய் மாறக்
கனவு காணணும் - நீயும்
கனவு காணணும்.

## மழலை தா(ஏ)க்கம்

மாட்டு வண்டிச் சத்தம் கேட்டு
மண் சாலை மணக்குது !
பஸ் லாரி போயுமே - தூய
காற்றில் தூசும் கலக்குது !

நாலு பஸ் போகும் அந்த
சாலையைத் தான் பார்க்கலே
ரெண்டடுக்கு பஸ்ஸையும் தான்
இன்னும் நானும் அறியலே!

துள்ளி ஓடும் மான்கள் கொண்ட
தோப்பிலிருக்கும் கவர்னரை
கேள்விப் பட்டேன் பார்க்கலே
கோவில் குளம் நானும் இன்னும் அறியல் !

அண்ணா எம்ஜிஆர் சமாதியும்
எனக்கு இன்னும் தெரியல
ரேடியோ டிவி நிலையத்தையும்
பார்த்துப் பேச முடியல !

அலை அடிக்கும் கடலையும்
கண்ணால் நானும் பார்க்கல
மலையின் வனப்பை மகிழ்ச்சியோடு
பகிர்ந்து கொள்ள முடியல !

காலைக் கதிரும் உதிக்கும் போது
தூக்கம் எனக்குத் தெளியல
தென்றல் காற்று வீசி என்னை
மகிழ வைக்க முடியல !
உடன் பிறப்புகள் மறைந்த சோகம்
நெஞ்சில் இன்னும் மறையல
கடன்பட்டார் நெஞ்சத்திலும்
“கும்பகோணம்” மறையல.

கல்விச் சாலையிலும்
தீட்டு இன்னும் ஒழியல
தாகம் தீர்க்கும் தண்ணீரிலும்
டம்ளர் மாற்றம் புடிக்கல.

சரஸ்வதி பள்ளிக்கூடம்
வந்து இன்னும் பார்க்கல - சாதி
பேதம் ஒழியாமல்
சமத்துவமும் மணக்கல!

## காகம் முட்டை குரங்கு வயிறு

*கா.. கா....என்றே தான்*
*பொழுதைக் கரைந்து கூவி அழைத்தது!*
*வா.. வா... என்றேதான் - குரங்கும்*
*வந்து வாழ்வைச் சிதைத்தது !*

*முருங்கை மரக் கூட்டிலே-காகம்*
*முட்டைக ளிட்டுப் பார்த்தது !*
*வேடிக்கை பார்த்த மனிதர்களைக்*
*கொத்திப் போக வைத்தது !*

*பொந்துக் குள்ளே முட்டைகளைப்*
*பாதுகாத்து வந்தது*
*குஞ்சு பொரிக்கும் நாளையும் - அது*
*கனவில் கண்டு மகிழ்ந்தது*

*இடியும் மின்னல் போலவே*
*குரங்கும் ஒன்று வந்தது*
*முருங்கை மரக் கூட்டையுமே*
*பார்த்துச் சிரித்து மகிழ்ந்தது!*

*கூட்டைக் கலைக்கக்*
*கைகள் நீண்டு முட்டைகளை எடுத்தது*
*வாயில் விழுங்கிக் குரங்குமே*
*புன்முறுவல் பூத்துச் சிரித்தது !*

*காக்கைக் கூட்டம் வந்துமே*
*கத்திக் கத்தி அழுத்து*
*குரங்கைச் சூழ்ந்து கொண்டுமே*
*முட்டைகளைக் கேட்டது*
*காக்கை சோகம் உணர்ந்துமே*
*குரங்கும் அழுது போனது - தன்*
*தவறை உணர்ந்து குரங்குமே*
*தேம்பித் தேம்பி அழுத்தது!*

கத்தி எடுத்துக் குரங்குமே
குத்தி வயிறைக் கிழித்தது
முட்டைகளைத் தந்துமே - தன்
உயிரை மாய்த்துக் கொண்டது !

## சுனாமி சோகம்

தோட்டத்திலே குருவிகளும்
பாட்டுப் பாடி நடந்தன
உணவைத் தேடி விதைகளையும்
அலகில் கொத்தித் தின்றன !

கூட்டில் இருக்கும் குழந்தைகள்
ஞாபகத்தில் வந்தது
பாட்டு மறந்து போகவே
சிறகு விரித்துப் பறந்தது !

கூட்டில் சத்தம் கேட்டது - குருவிக்
குஞ்சுகள் அழுது புரண்டன
விரைந்து வந்த குருவியும்
உணவை ஊட்டி மகிழ்ந்தது !

பசியும் தீர்ந்து சிரித்தன
பறக்கக் குஞ்சுகள் துடித்தன
காயும் பிஞ்சும் போலவே
தாயும் சேயும் இருந்தன !

பிஞ்சு மொழி கேட்டுமே
குருவி சோகம் தீர்ந்தது
மரத்தில் இவைகள் வாழ்க்கையும்
மகிழ்ச்சியோடே இருந்தது !

புயலும் மழையும் வந்தன
வாழ்வைப் புரட்டிப் போட்டன
சொர்க்க வாழ்வுக் கற்பனையும்
சுனாமியிலே அழிந்தது !

## யானை வருது

*தும்பிக்கை யானையாம்*
*நம்பிக்கை ஊட்டுதாம் !*
*அன்புக்கை பாகனும்*
*அங்குசத்தில் சிரிக்கிறான்!*

*சாலை எங்கும் நடக்குதாம்*
*மாந்தர் இனத்தை வணங்குதாம்.*
*பாலை மணலும் கசங்குதாம்*
*நிழலின் அருமை புரியுதாம்!*

*துட்டுப் பணம் வாங்குதாம்*
*எட்டி முத்தம் கொடுக்குதாம்*
*கட்டித் தங்கம் போலவே*
*பாகனையும் நினைக்குதாம்!*

*காட்டுக் குள்ளே வாழ்க்கையும்*
*கட்டுப் பட்டு இருக்குதாம்!*
*நாட்டுக் குள்ளே மனிதர்களின்*
*சேட்டை கண்டு கொதிக்குதாம்!*

## பட்டுப்பூச்சி மின்னல்

சோலையெங்கும் வாழ்ந்திடவே
இருக்குது கூடு - நல்ல
மாலைப் பொழுதும் மகிழ்ச்சியாக
இருக்குது பாரு

கூட்டுப் புழு வாழ்க்கையிலே
கூனி இருக்குது - பரந்த
காட்டுக் குள்ளே வாழ்க்கையுமே
கனவு காணுது

மழை முடிந்து ஒய்யாரம்
வானத்தில் பாரு - பசுந்
தழை முழுதும் வேர்த்திருந்து
சிரிக்குது பாரு

சிறகுக் குள்ளும் எத்தனையோ
வண்ணங்கள் பாரு - பட்டுப்
பூச்சி பறந்து உயரும் வானத்திலே
மின்னலைப் பாரு!

## வாழ்வின் விழுது

*விழுது... விழுது... விழுது*
*பூமியெங்கும் விழுது – நீ*
*வேர்களைப் பரப்பிடு !*
*விடியும் மட்டும் பசுமையினை*
*பூமியெங்கும் வளர்த்திடு !*

*மனித மூளை வேர்களுமே*
*அறிவை வளர்த்து உதவுது!*
*இனிய உலகம் படைத்திட – நம்*
*இயற்கை அறிவை வளர்த்திடு !*

*முகத்தில் இரண்டு கண்களுமே*
*உலகை ரசிக்க உதவுது !*
*அறிவுக் கண்ணைத் திறக்கவுமே*
*கல்வி மூன்றாம் கண்ணாகுது !*

*விழுதிறங்கும் வேளையிலே*
*பூமி சிலிர்த்து மகிழுது – அது*
*மானுடத்தை ஊஞ்சலாடி*
*மகிழ வைத்துப் பார்க்குது !*

*கற்ற கல்வி விருத்தி செய்ய*
*நாளும் படிக்கணும் – உன்னைப்*
*பெற்ற பயனும் மனிதருக்குப்*
*பெருமை சேர்க்கணும் !*

*கல்விச் சாலை யெங்குமே*
*அறிவுத் தீபம் ஒளிரணும் – அது*
*கண்ணொளியில் கசிந்துருகி*
*ஞானம் ஆகிப் போகணும் !*

## தாய் மொழி உன் வழி

குட்டித் தம்பி நீயும் தானே
சுட்டிப் பயலடா – உன்
வெள்ளை மனசில் கொள்கை
தீபம் ஏற்றிக் கொள்ளடா

செல்லப் பிள்ளை நீயும் எனக்கு
சேதி சொல்லடா – நீ
கன்னித் தமிழின் அழிவை யெண்ணி
கவலை கொள்ளடா !

கருவிலே சிசுக் கொலையைச்
செய்யும் துணிவடா – அது
கன்னித் தமிழ் வளர்ச்சிக்குக்
கள்ளிப் பாலடா !

கட்டழகு மேனியடா
கன்னித் தமிழுமே ! – அதைச்
சீர்கெடுக்கும் கயவர்களை
அழித்து வெல்லடா !

உலக மெலாம் மொழியுணர்வை
ஊட்டி வளர்த்திடு – நீ
உண்மை பேசி மொழிச் சிதைவைத்
தடுத்து நிறுத்திடு !

சாதி மத உணர்வுகளைக்
குழியில் தள்ளடா – அதை
மூடி நீயும் சவக் குழியின்
மேலே நில்லடா !

## உயிரைக் காப்பவள்

*உலக மெல்லாம்*
*உயர்ந்த பால்*
*ஒன்றே தானடா! - அது*

*அன்னை என்னும்*
*தெய்வத்தின்*
*தாய்ப் பாலடா !*

*ஊட்டி வளர்த்தே*
*உயிரைக் காப்பாள்*
*அன்னை தானடா ! - அவள்*

*அன்பு என்றும்*
*விரிந்து பரந்த*
*ஆழி தானடா !*

*தாய்ப் பாலே*
*தாய்மொழிதான்*
*துணிந்து சொல்லடா - அதை*

*உள்ள மட்டும்*
*காத்து நிற்க - நீயும்*
*உறுதி கொல்லடா !*

## கூண்டுப் பறவை

வீட்டுக்குள்ளே பறவையும்
கூண்டுக்குள்ளே அழுதது
பாட்டுப் பாடச் சொல்லவே
தன் அழுகையிலே சொன்னது!

அழுத குழந்தை சிரிக்கவும்.
கூண்டைக் காட்டிச் சொன்னது
என்னைப் பார்த்த குழந்தையும்
அழுகை நிறுத்திச் சிரித்தது |

பசிக்குப் பஞ்சம் இல்லைதான்
அன்பாய் உணவும் தந்தது!
புசித்து நானும் மகிழ்கிறேன்
புன்னகையில் சிரிக்கிறேன் !

எனக்கு ஜோடி இன்றியே
வாழ்க்கை கசந்து போகிறேன்
பிணக்குத் தீர நானுமே
பறந்து செல்லப் போகிறேன்

கூண்டைத் திறக்கச் சொல்லியே
குமுறிக் குமுறி அழுகிறேன்
குற்றம் இன்றி வாழவும்
மனிதர்களைக் கேட்கிறேன் !

பூனைக் குட்டி நீயுமே
புரிந்து போய்ச் சொல்லிவிடு
புதிய சிந்தனை வரணுமெனப்
புரட்சிக் கதையும் கூறிவிடு !
சின்னப் பாப்பா
சின்னப் பாப்பா
சின்னப் பாப்பா - உனக்கு

*எந்த மரம் பிடிக்குதுன்னு*
*சொல்லு பாப்பா !*

*தென்னை மரம்*
*பிடிக்குதுன்னு*
*சொல்வேன் தாத்தா ! - எனக்கு*
*தென்னை மரம்*
*பிடிக்குதுன்னு*
*சொல்வேன் தாத்தா !*

## சின்னப் பாப்பா –2

*சின்னப் பாப்பா - நீ*
*அருந்தும் பானம்*
*என்னவென்று சொல்லு பாப்பா !*

*தென்னை இளநீரை விரும்புகிறேன்*
*அன்புத் தாத்தா - அதை*
*நீயும் கோடையிலே*
*குடிக்க வேணும்*
*சின்னப் பாப்பா !*

*இளநீரை அருந்துவோர்க்கு*
*சின்னப் பாப்பா*
*தெளிந்த அறிவு*
*இருக்குமடி சின்னப் பாப்பா !*
*கோக் பெப்சி*
*வேணா முன்னு*
*சொல்லு பாப்பா - அது*
*உடலை அழிக்கும்*
*நீர்க் கொல்லின்னு*
*தள்ளு பாப்பா !*

*புட்டி கையில் தொட்டா*
*பேஷனாகும் சின்னப் பாப்பா - அதில்*
*அறிவும் அற்றுப் போகுதுன்னு*
*சொல்லு பாப்பா !*

*நல்ல குணம்*
*உனக்கிருக்கு*
*சின்னப் பாப்பா - நீ*
*நாலு பேர்க்கு வாழ வழி*
*சொல்லு பாப்பா !*

## தஞ்சாவூரு பொம்மை

தஞ்சாவூரு பொம்மை பாரு
தலை யாட்டும் அழகைப் பாரு
பஞ்சாய் மனசும் மாறும் பாரு
மலை போல் துன்பம் கரையும் பாரு!

கொஞ்சும் அழகைக் குறிப்பாய்ப் பாரு
குறுகுறுக்கும் கன்னம் பாரு
பானை உடம்பு முழுசாய்ப் பாரு
பண்ணையார் முகத் தோற்றம் பாரு!

நாமம் போட்ட அழகைப் பாரு
நமக்கும் நாமம் போடும் பாரு
முறுக்கு மீசை குனியும் பாரு
முத்தம் தரவும் அழைக்கும் பாரு!

அவசியமாய் வாங்கித் தர
தந்தை தாயைக் கேட்டுப் பாரு
கவர்ச்சி யின்றி அன்பையுமே
விதைத்து நாமும் மகிழ்வோம் பாரு!

## மரம் வளர்ப்போம்!

*பூமியிலே குளுமை யினைக்*
*காண வேண்டி - ஓங்கு*
*புகழ் மரங்க ளெல்லாம்*
*வளர்த்தல் வேண்டும்.*

*கழிவுகளும் புகையும் தான்*
*நம்மை யழிக்க - தினம்*
*காலை முதல் மாலை வரை*
*காற்றில் கலக்கும்.*

*வீடு தனில் விளக்கினையும்*
*ஏற்றுதல் போலே - விதை*
*போட்டே தான் நிலத்திலுமே*
*மரங்களை வளர்ப்போம்!*

*அச்சம் தவிர்க்க உதவிடும்*
*பச்சை நிறம் போலவே*
*மிச்சமின்றித் தூவிட - நாம்*
*நிலத்தைச் சமைப்போம்!*

## சந்தோசப் பறவைகள்

பறவை யெல்லாம் பாடுது
பக்கம் வந்து தேடுது
கறவை மாடு சிரித்தது
கறந்து பாலும் தந்தது !

குடித்துப் பறவைகள் மகிழ்ந்தன
கூட்டம் சேரக் கத்தின
பசிக்கு இங்கே வந்திடவும்
பாடிப் பாடி அழைத்தன !

எங்கிருக்கும் பறவைகளும்
எகிறிப் பறந்து வந்தன
இனத்தின் குரலைக் கேட்டதும்
இறங்கி வந்து பார்த்தன !

கோமாதா நமக் கெல்லாம்
குடிக்கப் பாலும் தந்தது
கூடி நாமும் கூட்டம் போட்டு
அன்னை சொல்ல வைக்குது!

பாதுகாக்கும் தாயாகவே
பட்டி தொட்டி சொல்லுது
சாதுவாக இருந்த மாடும்
சினந்து காடு வெல்லுது !

பறவைக் கூட்டம் நாமெல்லாம்
போற்றி யதை வணங்குவோம்
சிறகாய் நாமும் இருந்துமே
பறக்க வைத்து மகிழுவோம் !

## இமயம் முதல்

இமயம் முதல் குமரி வரை பாரு
இதய மெலாம் ஒன்று கூடும் கூறு !
சீயம்பல நிறைந்திருக்கும் நாடு - நாம்
சண்டைகளை ஒழிக்க வேணும் கூறு!

பனி மலையின் பாசத்தைப் பாரு
கனியுருகும் சாறாய் நீ மாறு !
பொங்கும்அலை கடலையுமே பாரு - புகழ்
தங்காமல் இடம் பெயரும் கூறு!

நீல வான அழகையுமே பாரு
நெருப்புக் கோளச் சூரியனைக் கேளு
புல் தரையின் மௌனத்தையும் பாரு - அதன்
உள்ளே புதையல் நிறைந்திருக்கும் பாரு !

கள்ள மில்லா மனிதர்களைப் பாரு
உள்ள மெல்லாம் உவகை கொள்ளும் கூறு
நல்ல நிலம் இந்தியா தான் பாரு - நாம்
அனைவருமே சுதந்திரத்தின் தேரு!

## தீபாவளி

தீபாவளி வருது பார்
தீபம் வீட்டில் சிரிக்கும் பார்
வாழ்க்கை இருட்டின் துயரமெலாம்
பட்டாசு வெடியில் தெரியும் பார் !

நரகா சூரன் அழிந்தானா
நாம யாரும் பார்க்க வில்லை
நல்லது கெட்டது எதுவுமே
நமக்கு இப்பத் தெரியவில்லை !

தூங்கி எழுந்து குளித்துமே
புதிய ஆடை உடுத்துவோம்
பாங்குடனே பட்டாசையும்
வெடித்து நாமும் மகிழுவோம் !

ஊது வத்தி கொண்டு வா
ஊசிப் பட்டாசு வெடிக்கலாம்
உளுந்த வடை சுடுகின்ற
அம்மாவையும் அழைத்து வா !

நீட்டு பென்சில் கொளுத்தினால்
பூவாய்ப் பறக்கும் நீளமாய்
வண்ண வண்ணப் பூக்களைக்
கண்டு மனமும் துள்ளுமே !

காசு கேட்டு வாங்கியே
கேப் வெடியும் வாங்கலாம்
பாசத்தோடு நாமுமே
பகிர்ந்து வைத்து வெடிக்கலாம் !

தீபாவளிப் பட்டாசில்
தீப ஒளி கொஞ்சமே
வெடித்து நின்னு பாத்தாக்கா
வீதி யெங்கும் வெளிச்சமே !

## பூப்பூவா...

அன்னை சிரிப்பில் முல்லைப் பூ
ஆடவர் சிரிப்பில் மல்லிப் பூ
இதயம் ரசிக்க ரோஜாப் பூ
ஈகை தந்ததும் பூரிப்பூ
உண்மை தெரிய உப்பூ
ஊசி தைக்க நூற்பூ
என்பு தோலும் பறிப்பூ
ஏற்றம் பெறவே நட்பூ
ஐந்து பூதங்கள் மலைப்பூ
ஒரே உலகம் உழைப்பூ
ஓங்கி வளர்க்கணும் அழைப்பூ
ஔஷதமாகும் அன்புப் பூ
இஃதே உலகத் தொகுப்பு - இதில்
இன்ப வாழ்வும் வனப்பூ...

## குழந்தைகளின் உலகம்

*கனவுகளாலானது.*
*வண்ணங்கள் சிறகடித்துப் பறப்பதைப்*
*பார்த்துக் குதூகலிக்க...*
*ஒன்று குழந்தையாக இருக்க வேண்டும்*
*இல்லையேல் குழந்தை மனமாவது*
*இருக்க வேண்டும்.*

*கவிஞர் ஆரிசன் எழுதியுள்ள*
*குழந்தைகளுக்கான*
*பாடல்களும், கவிதைகளும்*
*பாடும் சின்னப் பறவைகளாகி*
*வாசிப்பவர் மனக்கிளைகளில்*
*கீதம் இசைக்கும்...*